## October 28, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. தென் அமெரிக்க நாடான ஆர்ஜென்டீனாவில் நடைபெற்ற இடைக்கால தேர்தலில், அதிபர் ஜேவியர் மிலெய் தலைமையிலான ஆளும் கட்சி (எல்எல்ஏ) வெற்றி பெற்றுள்ளது.

   i. நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான இந்தத் தேர்தலில் 40.84 சதவீத வாக்குகளைப் பெற்று எதிர்க்கட்சிகளை அந்தக் கட்சி பெரும் வித்தியாசத்தில் வீழ்த்தியுள்ளது.
   ii. இந்த வெற்றியைத் தொடர்ந்து, பொருளாதாரத்தை தராளமாக்கும் தனது நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லவி
   iii. ருப்பதாக மிலெய் உறுதியளித்தார்.
   iv. அவரது ஆட்சியின் கீழ், 2023- இல் 200 சதவீதமாக இருந்த பண வீக்கம் 2025 செப்டம்பரில் 30 சதவீதமாகக் குறைந்தது நினைவு கூரத்தக்கது.

2. மேற்கு இந்திய தீவு நாடான ஜமைக்காவை மிகக்கடுமையான மெலிஸா புயல் நெருங்கி வருகிறது. கடந்த 1851- ஆம் ஆண்டு புயல் சீற்றங்கள் செய்யப்பட குறித்து பதிவு தொடங்கியதற்குப் பிறகு, ஜமைக்காவைத் தாக்கவிருக்கும் மிகத் தீவிரமான புயல் இது என்பது குறிப்பிடத்தக்கது.

   i. இந்தப் புயல் காரணமாக, மிக மோசமான வெள்ளப் பெருக்குகள், நிலச்சரிவுகள், கடுமையான கட்டமைப்பு சேதங்கள் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
   ii. ஜமைக்காவுக்கு அடுத்தபடியாக கியூபாவையும் அதன் பிறகு பஹாமாஸையும் இந்தப் புயல் தாக்கும் என்று கூறப்படுகிறது. எனினும், இந்தப் புயலால் அமெரிக்காவுக்கு பாதிப்பு இருக்காது என்று நிபுணர்கள் கூறினர்.

3. சூடான் ராணுவத்தின் முக்கிய நிலையை துணை ராணுவப் படையான ஆர்எஸ்எஃப் கைப்பற்றியது. அந்த நாட்டில் சுமார் இரண்டரை ஆண்டுகளாக ராணுவத்துடன் நடை பெற்றுவரும் உள்நாட்டுச் சண்டையில் ஆர்எஸ்எஃப் படைக்குக் கிடைத்துள்ள மிகப்பெரிய முன்னேற்றம் இது என்று கூறப்படுகிறது.

   i. வடக்கு ஆப்பிரிக்க நாடான சூடா னில், அரேபிய இனத்தவருக்கும், அரே பியர் அல்லாத ஆப்பிரிக்க இனத்தவருக் கும் இடையே நீண்ட காலமாக பதற்றம் நிலவி வருகிறது.
   ii. அரேபியர் அல்லாதோர் அதிகம் வசிக்கும் டார்ஃபர் மாகாணத்தில் தங்களது உரிமைகள் நசுக்கப்படுவதாகக் கூறி அந்த இனத்தைச் சேர்ந்த அமைப்பினர் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
   iii. கடந்த 1989-ஆம் ஆண்டு முதல் அந்த நாட்டில் சர்வாதிகார ஆட்சி செலுத்தி வந்த அல்-பஷீர் அரசு, இந்தப் போராட்டத்தின் போது அரேபியர் அல்லாத இனத்தவர்களைக் கொன்று குவித்து போர்க் குற்றத்தில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்படுகிறது.
   iv. அப்போது அல்-பஷீர் அரசுக்கு உதவியாக டாஃபர் பிராந்தியத்தில் முகமது ஹம்தான் டகேலோ தலைமையிலான 'அதிரடி ஆதரவு படை' (ஆர்எஸ்எஃப்) படுகொலைகளை நிகழ்த்தியது.
   v. இருந்தாலும், அல்- பஷீர் அரசுக்கு எதிராக பொதுமக்கள் போராட்டம் தீவிர மடைந்ததையடுத்து, அவரது ஆட்சியை ராணுவம் 2019-ஆம் ஆண்டு கவிழ்த்தது.
   vi. அதனைத் தொடர்ந்து அமைக்கப்பட்ட சிவில்-ராணுவ கூட்டணி அரசையும் அல்-புர்ஹான் தலைமையிலான ராணுவமும், டகோலோ தலைமையிலான ஆர்எஸ்எஃப் படையும் இணைந்து கவிழ்த்தன.

vii. இந்தச் சூழலில், ராணுவ தளபதி அல்-புர்ஹான், ஆர்எஸ்எஃப் படைத் தலைவர் டகேலோவுக்கு இடையே ஏற்பட்ட அதிகாரப் போட்டி காரணமாக, இரு தரப்பினருக்கும் இடையே கடந்த 2023 ஏப்ரல் 15-ஆம் தேதி முதல் கடுமையான சண்டை நடந்து வருகிறது. இந்த மோதலில், இதுவரை லட்சக்கணக்கானவர்கள் உயிரிழந்திருப்பதாக புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

viii. இந்த மோதலை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக சர்வதேச நாடுகள் மேற்கொண்டுவரும் முயற்சி இதுவரை எந்தப் பலனையும் அளிக்கவில்லை.

ix. இந்தச் சூழலில், ஏற்கெனவே ஆர் எஸ்எஃப் படையினர் அட்டூழியத்தில் ஈடுபட்ட டார்ஃபர் பிராந்தியத்தில் அவர்கள் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

4. பஹ்ரைனில் நடைபெறும் ஆசிய யூத் விளையாட்டுப் போட்டிகளில், பளுதூக்குதலில் தமிழகத்தின் மகாராஜன் ஆறுமுக பாண்டியன் வெள்ளிப் பதக்கம் வென்றார்.

5. மூன்று ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் கச்சா எண்ணெய் அளவை இந்தியா அதிகப்படுத்தியுள்ளது.

i. அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் கச்சா எண்ணெய் அளவு அக்.27-ஆம் தேதியன்று 5.4 லட்சம் பீப்பாய்களை எட்டியது. இது 2022-க்குப் பிறகு அந்நாட்டில் இருந்து இந்தியா இறக்குமதி செய்த அதிகளவு கச்சா எண்ணெய் ஆகும் என கெப்ளர் ஆய்வு நிறுவனத்தின் தரவுகளில் தெரிவிக்கப்பட்டன.

ii. ரஷியாவின் மிகப்பெரிய எண்ணெய் நிறுவனங்களான 'ரோஸ் நெஃப்ட்' மற்றும் ‘லுகோயில்’ மீது அமெரிக்கா கடந்த 22-ஆம் தேதி பொருளாதாரத் தடை விதித்தது. இதன் தொடர்ச்சியாக ரஷிய கச்சா எண்ணெய் இறக்குமதியை இந்தியா விரைவில் நிறுத்திக் கொள்ளும் என டிரம்ப் பலமுறை கூறி வருகிறார். இந்தச் சூழலில் அமெரிக்காவுடனான வர்த்தக உறவை சீரமைக்கும் நோக்கில் அந்நாட்டில் இருந்து கச்சா எண்ணெய் இறக்குமதியை இந்தியா அதிகரித்துள்ளது.

iii. இருப்பினும், இந்தியாவுக்கு அதிக கச்சா எண்ணெய் விநியோகிக்கும் நாடுகளின் பட்டியலில் ரஷியா முதலிடத்தில் உள்ளது. அதற்கு அடுத்தடுத்த இடங்களில் இராக், சவூதி அரேபியா ஆகிய நாடுகள் உள்ளன.

6. ஆசியான்' நாடுகளின் வருடாந்திர உச்சி மாநாட்டுக்கு இடையே, ஆஸ்திரேலிய பிரதமர் ஆன்டனி ஆல்பனேசி, நியூஸிலாந்து பிரதமர் கிறிஸ்டோபர் லக்சன் ஆகியோருடன் மத்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் சந்திப்புகளை மேற்கொண்டார்.

i. மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் (ஆசியான்) கூட்டமைப்பின் வருடாந்திர உச்சிமாநாடு தொடங்கியது.

ii. இக்கூட்டமைப்புடன் ஒத்துழைக்கும் நாடுகளாக இந்தியா, அமெரிக்கா, ரஷியா, சீனா, ஜப்பான், ஆஸ்திரேலியா, கனடா, நியூஸிலாந்து, தென்கொரியா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பிரிட்டன் உள்ளன.

7. கடலோர எல்லைகளைக் கண்காணிப்பதற்கான சிஎம்எஸ்-03 செயற்கைக்கோளுடன் எல்விஎம் 3 ராக்கெட், ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து நவம்பர் 2-ஆம் தேதி விண்ணில் செலுத்தப்பட உள்ளது.

i. நாட்டின் தகவல் தொடர்பு வசதிகளை மேம்படுத்த இஸ்ரோ சார்பில் இதுவரை 48 செயற்கைக்கோள்கள் விண்ணில் நிலைநிறுத்தப்பட்டுள்ளன.

அந்த வகையில், கடந்த 2013-ஆம் ஆண்டு செலுத்தப்பட்ட ஜிசாட்-7 (ருக்மணி) செயற்கைக்கோளின் ஆயுள்காலம் விரைவில் நிறைவடைய உள்ளது. அதற்கு மாற்றாக சுமார் ரூ.1,600 கோடியில் அதிநவீன சிஎம்எஸ்-03 (ஜிசாட்-7ஆர்) செயற்கைக்கோளை இஸ்ரோ தற்போது வடிவமைத்துள்ளது.

ii. இந்த செயற்கைக்கோள் எல்விஎம்-3 (ஜிஎஸ்எல்வி மார்க்-3) ராக்கெட் மூலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவன் ஏவுதளத்தில் இருந்து நவம்பர் 2-ஆம் தேதி விண்ணில் செலுத்தப்பட உள்ளது.

iii. சிஎம்எஸ்-03 செயற்கைக்கோள் 4,400 கிலோ கிலோ எடை கொண்டது. இதுவரை புவிவட்டப் பாதைக்கு அனுப்பப்பட்ட செயற்கைக் கோள்களில் இதுவே அதிக எடை கொண்டதாகும். இதில் விரிவுபடுத்தப்பட்ட மல்டி பேண்ட் தொழில்நுட்ப வசதிகள் உள்பட பல்வேறு நவீன அம்சங்கள் இடம் பெற்றுள்ளன.

iv. இந்திய பாதுகாப்புத் துறையின் கண்காணிப்புப் பணிகளுக்காக இந்த செயற்கைக்கோள் பயன்படுத்தப்பட உள்ளது. இந்திய கடலோர எல்லைகளைக் கண்காணிப்பதுடன், போர்க்கப்பல்கள் மற்றும் விமானங்களுக்கு இடையே தொலைத்தொடர்பு சேவையை மேம்படுத்தவும் இது உதவும். எல்விஎம்-3 ராக்கெட்டின் 5-ஆவது ஏவுதல் திட்டம் இது. இதற்கு முன்பு சந்திரயான் -3 விண்கலம் இந்த ராக்கெட் மூலமாக வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

8. உலகின் கடல்சார் வர்த்தகத்தின் நுழைவு வாயிலாக இந்தியா விரைவில் மாறும் என மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா தெரிவித்தார்.

i. மத்திய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிப் பாதைகள் அமைச்சகம் சார்பில் 'இந்திய கடல்சார் வாரம் 2025 என்ற பெயரில் சர்வதேச அளவில் துறைமுகங்கள் மற்றும் கடல்சார் துறையில் முக்கியத்துவம் வாய்ந்த உச்சி மாநாடு மும்பை கோரேகானில் உள்ள வர்த்தகக் கண்காட்சி அரங்கத்தில் திங்கள்கிழமை தொடங்கி அக். 31 வரை நடைபெறுகிறது.

ii. இந்த உச்சி மாநாட்டை மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தொடங்கி வைத்துப் பேசியதாவது:

iii. 13 கடல்சார் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் அடங்கிய இந்திய கடற்கரையின் நீளம் சுமார் 11,000 கி.மீ.ஆகும். இந்த மாநிலங்கள் நாட்டின் மொத்த உற்பத்தியில் சுமார் 60 சதவீதத்தைப் பங்களிப்பாக வழங்குகின்றன.

iv. இந்தியாவில் அமைக்கப் பட்டுள்ள சுமார் 24 லட்சம் சதுர கிலோமீட்டர் பரப்பளவு கொண்ட சிறப்பு பொருளாதார மண்டலங்கள் உலக அளவில் முதலீட்டாளர்களையும் உற்பத்தியாளர்களையும் ஈர்க்கின்றன.

v. இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் உள்ள 38 நாடுகள் உலகளாவிய ஏற்றுமதியில் தோராயமாக 12 சதவீத பங்களிப்பை வழங்குகின்றன.

vi. சாகர்மாலா திட்டத்தின் கீழ் மார்ச் 2025-க்குள் 70 பில்லியன் டாலர் மதிப்புள்ள 839 திட்டங்களை முடிக்க அடையாளம் காணப்பட்டுள்ளது. 5 பில்லியன் டாலர் மதிப்புள்ள கிரேட் நிக்கோபார் துறைமுகம் அமைக்கும் திட்டம் கட்டுமானத்தில் உள்ளது. இது இந்தியாவின் கடல்சார் உலகளாவிய வர்த்த கத்தைக் கணிசமாக மேம்படுத்தும். கூடுதலாக சுமார் 200 மில்லியன் டாலர் முதலீட்டில், கொச்சி கப்பல் கட்டும் தளம் அமைக்கப்பட்டு வருகிறது.

9. பிரபல ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சை நிபுணரும், ஓய்வு பெற்ற மருத்துவப் பேராசிரியருமான டாக்டர் கே.மாதங்கி ராமகிருஷ்ணன் (91) வயது முதிர்வு காரணமாக சென்னையில் திங்கள்கிழமை (அக்.27) காலமானார்.